பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 19 திங்கட்கிழமை 04.08.2025 | அதிர்வு 03

## கழிவுநீர் குழியில் விழுந்து 8 வயது சிறுவன் உயிரிழப்பு

நுவரெலியா – பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிலுள்ள கிவ் தோட்டக் கீழ்ப் பிரிவில் கழிவுநீர் குழியில் விழுந்து 8 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

03▶



### செம்மணி விவகாரம்:

# சர்வதேச விசாரணைக்கு அநுர உடன்பட வேண்டும்

## சோமரத்னவுக்கு சிறைக்குள்ளே விசேட பாதுகாப்பு உடன் வழங்கப்பட வேண்டும் என்றும் மனோ வலியுறுத்து

“செம்மணி படுகொலை வழக்கில் சர்வதேச கண்காணிப்பு, விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்பட வேண்டும். அதிலே, லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன்னர், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கு உடனடியாக அதியுயர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.” - என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

“கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி திருமதி எஸ்.சி. விஜயவிக்கிரம, ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் நகல்களை பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் அனுப்பியுள்ளார். ஐ. நாவுக்கும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தனது கணவர் தன்னிடம் கூறிய விடயங்களை, அவர் எழுதியுள்ளார். ஆகவே, இன்று இந்தக் கடிதம், அநுர குமார திஸநாயக்கவின் “கோர்ட்டில்” நிற்கின்றது.

03▶

# செம்மணியில் சி.ஐ.டி.யிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வாக்குமூலம்!

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தற்போது கையாளப்பட்டுவரும் நிலையிலேயே இந்த வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

செம்மணியில் வைத்தே வாக்குமூலம் பெறும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.






அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று வழங்கிய முக்கிய இரண்டு அதிரடித் தீர்ப்புகள் உள்ளூராட்சி சபை விவகாரங்களில் – குறிப்பாக வடக்கில் – அதுவும் சாவகச்சேரியில் – அரசியலில் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்றன.

மிக முக்கியமான இந்தத் தீர்ப்பை ஊடகங்கள் மூன்று நாள்களாகக் கண்டுகொள்ளாமல் விட்டமை ஆச்சரியத்துக்குரியது.

வடக்கில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்ய முயற்சி எடுத்து அரசு வெளியிட்ட வர்த்தமானி

04▶



## செம்மணி மனிதப் புதைகுழிகள்:

# சர்வதேச விசாரணை நடந்தால் சாட்சியமளிப்பதற்கு நான் தயார்

## கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற லான்ஸ் கோப்ரல் சோமரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார் என்று குறிப்பிட்டு அவரின் மனைவி எஸ். சி. விஜயவிக்ரம ஜனாதிபதி

அநுரகுமார திஸநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன், 7ஆம் காலணி இராணுவப்படை தலைமையகத்தில் கொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரின் குடும்பத்தாரின் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைய புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்தகால அரசாங்கங்கள் இராணுவ உயர் அதிகாரிகளைப் பாதுகாத்துக் கொண்டு, கீழ்மட்ட வீரர்களைத் தண்டிப்பதன் ஊடாக, குற்றமிழைத்த இராணுவத்தினரைத் தாம் தண்டித்திருப்பதாக சர்வதேச சமூகத்துக்குக் கூறி வந்தன என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"செம்மணி சோதனைச் சாவடியானது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழையும் பிரதான சோதனைச் சாவடியாக இருந்தது. அந்தச் சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய ஐந்து இராணுவத்தினருக்கு மேலதிகமாக கப்டன் லலித் ஹேவாகேயின் ஆலோசனைக்கு அமைவாக நாளாந்தம் இந்த சோதனைச்சாவடிக்கு வருகைதரும் லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளரான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் நஸார் ஆகியோரால் அங்கு அழைத்துவரப்படும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினரால் அடையாளம் காண்பிக்கப்படும் வீதியில் செல்லும் சந்தேகநபர்கள் செம்மணி சோதனைச் சாவடியில் கைது செய்யப்படுவர்.

அவர்கள் மாலை 4.00 மணியின் பின்னர் ட்ரக் வாகனத்தில் ஏற்றப்பட்டு 7ஆவது காலணி இராணுவப் படை தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்படுவர். அங்கு மரணிப்போரின் உடல்கள் இரவு வேளையில் மீண்டும் செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டுவரப்படும். அவற்றைப் புதைக்குமாறு எனது



கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிட்டுவிட்டு, வந்தவர்கள் மீண்டும் திரும்பிச் செல்வார்கள் என்றே எனது கணவர் கூறியிருக்கின்றார். செம்மணி சோதனைச்சாவடியில் இவ்வாறான நடவடிக்கைகள் சுமார் ஒருவருடகாலமாக இடம்பெற்றிருக்கின்றன.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மாத்திரம் வெளிவந்தமைக்கான காரணம் என்ன? செம்மணி சோதனைச்சாவடியில் இதுவரையில் சுமார் 300 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, கொன்று புதைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில் கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் படுகொலை மாத்திரம் வெளியே வந்தமைக்கு இதுவே காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சகோதரியான சுனேத்ரா பண்டாரநாயக்கவின் கணவர் சர்வதேச மனித உரிமைகள் செயல்பாட்டாளரான குமார் ரூபசிங்க ஆவார். குமார் ரூபசிங்க கிருஷாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் உறவினர் என்பதனால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரம் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டு, செம்மணி சோதனைச் சாவடியில் பணியாற்றிய எனது கணவர் உள்ளிட்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளடங்கலாக அவரது குடும்பத்தினரும் மேலே குறிப்பிட்ட முறைமையில் கப்டன் லலித் ஹேவாகே குழுவினராலேயே கைது செய்யப்பட்டனர். செம்மணி சோதனைச்சாவடியில் இறுதியாகக் கைது செய்யப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், கைதான அன்றைய தினம் மாலை 4.00 மணியின் பின்னர் 7ஆம் காலணி இராணுவப் படை தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, இரண்டு தினங்களில் பின்னர் அவர்கள் கொல்லப்பட்டு, அவர்களின் உடல்கள் மீண்டும் செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கு எனது கணவர் உள்ளடங்கலாக ஏனைய இராணுவத்தினரிடம் அவர்களது உடல்கள் ஒப்படைக்கப்பட்டதுடன், அவற்றைப் புதைக்குமாறு உத்தரவிட்ட கப்டன் லலித் ஹேவாகே, அங்கிருந்து வெளியேறினார்.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கணவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 1999 ஆம் ஆண்டு கப்டன் லலித் ஹேவாகே, கப்டன் பெரேரா, லெப்டினன்ட் உதயகுமார, மொழிபெயர்ப்பாளர்களான பொலிஸ் பரிசோதகர் சமரசிங்க, பொலிஸ் பரிசோதகர் அப்துல் ஹமீட் நஸார், லெப்டினன் துடுகல ஆகிய அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 6 மாதங்களில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அந்த வழக்குக்கு என்ன நடந்தது என யாருக்கும் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்தின் பின்னர் எனது கணவர் சார்பில் முன்னிலையாவதற்கு விருப்பம் தெரிவித்து, போகம்பரை சிறைச்சாலைக்கு வருகை தந்து அவரைச் சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், எனது கணவரிடம் விடயங்களைக் கேட்டறிந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார். இருப்பினும் திடீரென குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் எனது கணவரால் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இருப்பினும் உயர்நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகித்து, எனது கணவர் உள்ளிட்ட தரப்பினருக்கு மீண்டும் மரண தண்டனை விதிக்கச் செய்தவர் அப்போதைய ஜனாதிபதியாவார். செம்மணி சோதனைச் சாவடி குறித்த சகல தகவல்களையும் மேல்நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியமையே அதற்குக் காரணமாகும். அந்தப் பழிவாங்கல்கள் இன்று வரை தொடர்கின்றன." – என்றும் அவர் கூறியுள்ளார்.

# வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட நான் விரும்புகின்றேன்!

## தமிழரசின் பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விரும்புகின்றேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"இந்த விடயத்தை நான் முறையாக கட்சிக்கு அறிவிக்கவுள்ளேன். எனினும், எனது வேட்புமனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது. என்னை விட பொருத்தமான ஒரு வேட்பாளரை முதலமைச்சர் பதவிக்கு கட்சி அடையாளம் கண்டால் கட்சியின் முடிவுக்கு நான் முழுமையாகக் கட்டுப்படுவேன்." – என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் அவர் இந்த விடயத்தை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.



# தீ விபத்தில் சிக்கிய வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

சுருட்டு பற்றவைத்தபோது வயோதிபர் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பட்டின சபைவீதி, மானிப்பாயைச் சேர்ந்த ஆதன் சின்னமணி (வயது 95) என்பவராவார்.

மேற்படி நபர் கடந்த 26 ஆம் திகதி இரவு 10:30 மணியளவில் சுருட்டுக்கு தீப்பற்ற வைத்துவிட்டு தீக்குச்சியை சாரம் மீது போட்டுள்ளார். தீயில் எரிந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சர்வதேச விசாரணைக்கு...**

சர்வதேச கண்காணிப்பு விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்பட வேண்டும். அதிலே லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கு, உடனடியாக அங்கே அதியுயர் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில், அரசியல் சிவில் சமூகமாக நாம் கூட்டு மேல் நடவடிக்கைக்கு தயாராவோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க்கிடம் நாம் அதிகாரபூர்வமாக கோரிக்கை விடுப்போம். பிரசித்தி பெற்ற சித்திர வதை, பாலியல் வல்லுறவு, படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனக்கு ஆணையிட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்கிறார். இலங்கை வரலாற்றில் இப்படியோர் இராணுவத்தைச் சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்டத் தயார் என்று கூறவில்லை.

ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அநுரகுமார அரசாங்கம் முன் வர வேண்டும். சர்வதேச நெருக்குதல்களை முறையாகத் தர ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் முன்வர வேண்டும். இதைச் செய்ய முடியா விட்டால், இது ஓர் அரசாங்கமாகவோ, அது ஓர் ஐ.நா. சபையாகவோ இருக்க முடியாது. இது இன்று சர்வதேச விவகாரம் ஆகி விட்டதை அநுரகுமாரவும் வோல்கர் டர்க்கும் உணர வேண்டும். அதனால்தான், அநுரவுக்கு செம்மணி விவகாரம் ஓர் அக்கினிப் பரீட்சை என்று அன்றே சொன்னேன். இன்று மீண்டும் கூறுகிறேன்." – என்றுள்ளது.

**கழிவுநீர்...**

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அறிவித்தலை ஊடகங்கள் ஒரு மாதம் தாமதமாகக் கண்டுபிடித்தமை போல, இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பும் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட பின்னர் இன்று தான் மக்களுக்கு வெளிச்சத்துக்கு வருகிறது.

சாவகச்சேரி நகர சபை நிர்வாகத்தை அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் கைப்பற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி – சங்கு கூட்டு அதைப் பறி கொடுக்கும் நிலையை உயர்நீதிமன்றத்தின் இப்போதைய தீர்ப்பு ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சாவகச்சேரி நகர சபைக்கும் சாவகச்சேரி பிரதேச சபைக்கும் பட்டியல் மூலம் நியமனமான இரண்டு பெண் உறுப்பினர்களின் தெரிவுகளை ஆட்சேபித்து ரிட் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமை தெரிந்ததே.

இந்தச் சட்ட நடவடிக்கை மூலம், தாம் வளர்ந்து வருகின்ற – தேர்ந்த – அனுபவம் மிக்க – சட்டத்தரணி என்பதை வழக்கின் பின்புலத்திலிருந்து அதை இயக்கிய கேசவன் சயந்தன் நிரூபித்து இருக்கின்றார் என்பதே என் கணிப்பு.

மேற்படி இரண்டு உறுப்பினர்களும் அந்தந்தச் சபைகளுக்குரிய எல்லைப் பரப்புக்குள் வதிபவர்களோ அல்லது அந்தந்தச் சபைகளுக்குரிய பிரதேச வாக்காளர்களோ அல்லர் என்பதை சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில் அவர்கள் அந்தச் சபைகளுக்குப் போட்டியிடுவதற்கோ அல்லது தெரிவு செய்யப்படுவதற்கோ தகைமை அற்றவர்கள் என்று உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட இருவரும் சபைகளின் கூட்டங்களில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருந்தது.

அதனால், அவர்கள் இருவரும் சபையின் முதற் கூட்டத்தில் பங்கு பற்றாத நிலையில் இரண்டு சபைகளிலும் தமிழரசு கட்சிக்கும் மறுபுறத்தில் சைக்கிள் – சங்கு கூட்டணிக்கும் சமமான எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தமையால், இரண்டு சபைகளிலும் சீட்டுக் குலுக்கள் மூலம் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். சாவகச்சேரி நகர சபையில் சைக்கிள் கட்சியும், சாவகச்சேரி பிரதேச சபையில் தமிழரசும் வெற்றி பெற்றன.

இப்போது இந்த ரிட் மனுக்கள் கடந்த வெள்ளியன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன், மேற்படி இருவரும் தங்களின் சம்பந்தப்பட்ட சபை உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்து விட்டனர் என்று நீதிமன்றுக்கு அறிவித்தார். அதன் காரணமாக வழக்கை தொடர வேண்டிய தேவை இல்லை என்று எதிர் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது எனத் தெரிகிறது.

ஆயினும், வழக்கின் தீர்ப்பு ஒன்றை மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ வலியுறுத்தியமையால் நீதிமன்றம் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்தது.

நீதியரசர்கள் மஹிந்த சமயவர்த்தன, அர்ஜுன ஒபயசேகர மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் மேற்படி இருவரும் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நிராகரித்துத் தள்ளுபடி செய்தனர்.

மேற்படி இருவரும் அந்தந்த சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர்கள், தகைமையீனம் கொண்டவர்கள் என்று உயர் நீதிமன்றம் தன் தனது தீர்ப்பில் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது.

இந்த விடயம்தான் இரண்டு சபைகளிலும் தனது முழு உறுப்பினர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சட்ட ரீதியாக இழக்கக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தி இருப்பதாக சம்பந்தப்பட்ட சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

மேற்படி இரண்டு பெண் உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட வேட்பு மனுவில் பெயர்கள் சேர்க்கப்படுவதற்கான தகைமையற்றவர்கள் – தகுதியீனம் உடையவர்கள் – என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டதனால், அந்த வேட்பு மனுவில் அவர்களின் பெயர்களை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி பெயர் நீக்கம் செய்யப்பட்டால், இரண்டு சபைகளுக்குமான சைக்கிள் கட்சியின் வேட்பு மனுக்களிலும் பெண் வேட்பாளரின் சட்டத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாமல், அந்த வேட்பு மனுக்கள் அடியோடு நிராகரிக்கப்பட வேண்டியவையாகக் கருதப்படும் சட்ட சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ரிட் வழக்குகளில் தேர்தல் ஆணையமும் ஒரு எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்டு இருப்பதால், இந்தத் தீர்ப்பு தேர்தல் ஆணையத்தையும் கட்டுப்படுத்தும். இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் தொடர் நடவடிக்கைகளைத் தானே எடுக்க வேண்டி இருக்கும் என சட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான தகுதியீனத்தை மேற்படி சைக்கிள் கட்சியின் இரண்டு சபைகளுக்குமான வேட்புமனுக்கள் கொண்டிருப்பதால் அவற்றை நிராகரித்து, அந்தக் கட்சியின் சார்பிலான தெரிவுகளை தள்ளுபடி செய்ய வேண்டிய கடப்பாடு தேர்தல் ஆணையத்துக்கு வந்து விட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

லத்தீனில் Ex mero motu என்ற ஒரு சட்டச் சொல்லாடல் உள்ளது. 'எக்ஸ் மெரோ மோட்டு' என்பது 'ஒருவரின் சொந்த விருப்பத்தின் பேரில்' அல்லது 'தன்னார்வத்துடன்' என்று பொருள்படும் ஒரு லத்தீன் சொற்றொடர். சட்டச் சூழல்களில், இது சம்பந்தப்பட்ட தரப்பினரின் எந்தவொரு தூண்டுதலோ அல்லது கோரிக்கையோ இல்லாமல் நீதிமன்றம் அல்லது பிற அதிகாரத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இதில் முடிவுகளை எடுப்பது, உத்தரவுகளை பிறப்பிப்பது அல்லது அவர்களின் சொந்த முயற்சியில் பிற நடவடிக்கைகளை எடுப்பது ஆகியவை அடங்கும். அதன் அர்த்தம் சட்ட ரீதியாகவே ஒரு தரப்பு தன்னுடைய தொடர் கடப்பாடுகளை நிறைவு செய்ய வேண்டிய விடயத்தை குறிப்பதாகும்.

தேர்தல் ஆணையம் இந்த வழக்கை பொறுத்தவரை மேற்படி இருவரும் வேட்பாளர்களாக வேட்புமனுக்களில் சேர்க்கப்பட தகுதியற்றவர்கள் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்த வேட்பு மனுக்களையே நிராகரித்து, தொடர் நடவடிக்கைகளை தானாகவே எடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தேர்தல் ஆணையம் அதைச் செய்யத் தவறுமானால், விடயத்தோடு தொடர்புபட்ட பிற தரப்புகள் – இந்த வழக்குகளில் தமிழரசு கட்சி போன்ற தரப்புகள் – அதனை உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையத்துக்கு வலியுறுத்தி சுட்டிக் காட்டலாம். தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் உயர் நீதிமன்றத்தை நாடி, அதன் முன்னைய தீர்ப்புக்கு அமைவாக தொடர் நடவடிக்கைகளை எடுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடுமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்யலாம்.

மேற்படி இரண்டு வேட்பாளர்களும் சம்பந்தப்பட்ட சபைகளின் சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகைமையற்றவர்கள் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக இரண்டு சபைகளிலும் சைக்கிள் கட்சியின் வேட்மனுக்கள் முழுமையாகச் செல்லுபடியற்றதாகி, அதனடிப்படையில் தனது முழு உறுப்பினர்களையும் சைக்கிள் கட்சி அடியோடு இழக்கும் ஆபத்து உருவாகி உள்ளது.

இது குறித்து சைக்கிள் கட்சியில் சட்ட வட்டாரங்கள் தங்களுக்குள் சண்டப் பிரசண்ட வாதங்களிலும் அதிர்ச்சியிலும் இருப்பதாக சில தரப்புகள் தெரிவித்தன.

சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன் நகர்த்திய இந்த சட்ட நடவடிக்கைகளின் அதிர்வுகள் நீண்ட பல தாக்கங்களையும் விளைவுகளையும் தொடர்ந்து ஏற்படுத்தும் என்று நான் கருதுகிறேன்.

# போதுமான பாதுகாப்பு ஜனாதிபதிக்குத் தேவை

## எஸ்.எம். மரிக்கார் கூறுகிறார்



ஜனாதிபதிக்கு போதுமான பாதுகாப்பு தேவை எனவும் அதே நேரத்தில் அவர் பொழுதுபோக்கை அனுபவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு ஜனாதிபதி தனது பணியைச் செய்யும்போது மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்.

எனவே, ஒருவர் எப்போதும் மன அழுத்தத்தில் வேலை செய்யக் கூடாது என்பதால் அவருக்கு பொழுதுபோக்கு தேவை.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அவர்கள் கடந்த காலத்தில் தேசத்துக்காக சேவை செய்தவர்கள்.

எனவே, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் எந்தத் தவறும் இல்லை.

இருப்பினும், அவர்களுக்கு ஊழியர்கள் மற்றும் அலுவலகங்கள் போன்ற கூடுதல் ஆடம்பரங்களை வழங்கக் கூடாது." என்றார்.



# தேங்காயின் விலை மீண்டும் அதிகரிப்பு

நாட்டில் தேங்காய் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சாதாரண அளவிலான தேங்காய் ஒன்றின் சில்லறை விலையில் 185 முதல் 205 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், சிறிய தேங்காய் ஒன்று 160 முதல் 190 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

முன்னதாக, பொருள்கள் விலை குறைப்பை எதிர்வரும் 3 வருடங்களுக்கு மேற்கொள்ள முடியாது என, வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பி.சரத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே, அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கு உள்ளிட்ட

# சில மாகாணங்களில் காற்றுடன் மழை பெய்யும்

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் குருணாகல் மாவட்டத்திலும் 75 மில்லி மீற்றர் வரையில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன் கடும் காற்றும் வீசக்கூடும் என திணைக்களம் கூறியுள்ளது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, சிலாபம் முதல் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 வரை அதிகரிக்கக்கூடும் என திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கொழும்புத் துறைமுகத்துக்கு 6 மாதங்களில் அதிக இலாபம்

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை 66 வீத லாபத்தை பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் இதேகாலகட்டத்தில்இலங்கை துறைமுக அதிகாரசபை 14,691 மில்லியன் ரூபா வினை இலாபமாக பதிவு செய்தது.

இந்தநிலையில் இந்த ஆண்டில் முதல் 6 மாதங்களில் அந்த தொகை 24,418 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்த உயர்வுக்கு பெரும்பாலும் கொழும்பு துறைமுகத்தில் அதிகரித்த சரக்கு கையாளுதல் மற்றும் மேம்பட்ட செயல்திறன் காரணமாகும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆண்டின் முதல் பாதியில், கொழும்பு துறைமுகம் 4 மில்லியனுக்கும் அதிகமான இருபது அடிக்கு சமமான கொள்கலன்களை கையாண்டது.

அந்த எண்ணிக்கை 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் 8 மில்லியன் கொள்கலன்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், தெற்காசியாவின் முக்கிய கடல்சார் மையமாக கொழும்பு துறைமுகம் தமது நிலையை வலுப்படுத்தி வருவதாகவும் அந்த அமைச்சு தெரிவிக்கின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சர்ச்சைக்குரிய சட்டமூலங்கள்

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்படுகின்ற சிறப்புச் சலுகைகளையும் முன்னாள் எம்.பி.க்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தையும் இரத்து செய்வதற்கு வழி செய்யும் சட்டமூலங்களைத் தயாரிக்க அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்திருந்தது.

அதற்கு அமைவாக, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சலுகைகளை இரத்துச் செய்ய வகை செய்யும் புதிய சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு விட்டது.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த சட்டமூலம், 1986 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்தை ரத்து செய்யும் வகையில் அமைந்துள்ளது.

ஆயினும் வரப் போகின்ற இந்தப் புதிய சட்டங்களால் பாதிக்கப்படப் போகின்ற இரு தரப்பினருமே - முன்னாள் ஜனாதிபதிகளான ஒரு தரப்பும், முன்னாள் எம்.பிக்கள் என்ற மறு தரப்பும் - அரசின் இந்த நடவடிக்கையை இயன்ற வகையில் எதிர்ப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றன எனத் தெரிகின்றது.

ஐநூறுக்கும் மேற்பட்ட முன்னாள் எம்.பி.க்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓய்வுபெற்ற எம்.பி.க்கள் சங்கம், முன்னாள் எம்.பி.க்களின் ஓய்வூதியம் இரத்து செய்யப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை ஒட்டி அந்தச் சங்கம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் முறைப்பாட்டுக் கடிதத்தையும் சமர்ப்பித்துள்ளது. ஓய்வுபெற்ற எம்.பி.க்களில் பெரும்பாலானோர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றமையால், அவர்கள் வேலை செய்யவோ அல்லது தொழில் நடத்தவோ முடியாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கூட கடினமாக இருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இந்த ஓய்வூதியத்தை இரத்து செய்வது நியாயமற்றது என்று அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அதே சமயம் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்துச் செய்வதை நோக்கமாகக் கொண்ட சட்டமூலத்தை உயர் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கொழும்பில் நேற்று முன்தினம் தங்களுக்குள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், மாலைத்தீவுகள், பூட்டான் மற்றும் நேபாளம் உள்ளிட்ட பிராந்திய நாடுகளில் முன்னாள் அரச தலைவர்கள் அனுபவிக்கும் சலுகைகளை மைத்திரி மற்றும் ரணிலை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டக் குழுக்கள் பகுப்பாய்வு செய்து வருகின்றன என்றும் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மற்ற நாடுகளில் வழங்கப்பட்ட சலுகைகள் குறித்து சேகரிக்கப்பட்ட தரவுகள் தொடர்பிலும் முன்னாள் ஜனாதிபதிகளான இருவரும் தங்களுக்குள் விவாதித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

எது, எப்படியாயினும் இந்த இரு சட்டமூலங்களும் உயர்நீதிமன்றத்தில் கடும் சட்டச் சவாலுக்கு உள்படுத்தப்படும் என்பது பெரும்பாலும் நிச்சயம்.




# வெளிநாட்டவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் விமான நிலையத்தில் விநியோகிக்கப்படுகிறது

நாட்டிற்கு வரும் வெளிநாட்டவர்களுக்காக விமான நிலையத்தில் தற்காலிக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமானது.

இது தொடர்பில் விசேட நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் வாகன அனுமதிப்பத்திரத்தை விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வெளிநாட்டவர்கள் வேரஹெரவில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

# 2 லட்சத்துக்கும் அதிக சுற்றுலாப் பயணிகள் கடந்த மாதத்தில் மாத்திரம் நாட்டிற்கு வருகை

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மாத்திரம் 2 லட்சத்து 244 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த தொகையானது, கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடும் போது 6.6 சதவீத அதிகரிப்பாகுமெனக் குறிப்பிடப்பிட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவிலிருந்து மொத்தமாக 37,128 சுற்றுலாப் பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 23,475 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன், நெதர்லாந்திலிருந்து 15,556 பேரும், சீனாவிலிருந்து 12,982 பேரும் கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டு முதல் 7 மாதங்களில், நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,368,288 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



# இலங்கையில் நடந்ததைப்போல தமிழகத்திலும் இனப்படுகொலை

## சீமான் தெரிவிப்பு



இலங்கையில் நடந்ததைப் போல தமிழகத்திலும் இனப் படுகொலை நடக்கிறது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

காடுகளில் மேய்ச்சல் உரிமை கோரி தேனி மாவட்டம் போடி முந்தல் பகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் மலையேறி மாடு மேய்க்கும் போராட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக ஏராளமான நாட்டு மாடுகள் அழைத்து வரப்பட்டன. இருப்பினும் அனுமதியின்றி போராட்டம் நடத்த முயல்கின்றனர் என கூறி சீமானை பொலிஸ் மற்றும் வனத்துறையினர் தடுத்து நிறுத்தினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கருத்து தெரிவிக்கையில்,

“இலங்கையில் நடந்ததைப் போல தமிழகத்திலும் இனப் படுகொலை நடக்கிறது. இலங்கையில் குண்டுகளை வீசி இனப் படுகொலை செய்தனர். ஆனால் தமிழகத்தில் மது குடிக்க வைத்து இனப் படுகொலை செய்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் நடந்ததும், தமிழகத்தில் நடந்து கொண்டிருப்பதும் ஒன்றுதான். தமிழகத்தில் டாஸ்மாக் மூலம் தொடர்ந்து லட்சக் கணக்கானோர் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த நாட்டை உலகத்தின் தலை சிறந்த நாடாக, பூமியின் சொர்க்கமாக மாற்றி படைப்போம். 5 ஆண்டுகளில் சிறந்த மாநிலமாக மாற்றுவேன். அவ்வளவு திட்டங்கள், சிந்தனைகள், கனவுகள் எங்களிடம் உள்ளன.

அதனை நிறைவேற்ற கூடி வாருங்கள் ஓடி வாருங்கள் என் மக்களே. ஆடு, மாடுகள் மேய்ப்பது தொழில்முறை அல்ல. அது எங்களது வாழ்க்கை முறை. கலாச்சாரம், பண்பாடு. மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடிய பரம்பரை நாங்கள். மேய்ச்சல் வன நிலம் என்பது எங்களது உரிமை. ஜாதி, மதம் கொடிய நோய், அது நம்மை பிரிக்கும். ஆனால் மொழி உணர்வே நம்மை இணைக்கும்.

கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்லும் விவசாயிகளுக்கு வனத்துறையினர் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். கூரிய கொம்புகள் இருந்தும் மாடுகளுக்கு போராட தெரியவில்லை. மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் சென்றால் மட்டுமே மலைப் பகுதி, வனப் பகுதியில் காட்டுத் தீ பரவுவது தடுக்கப்படும்.

மலைகளை பாதுகாக்க வேண்டுமெனில் அங்கு ஆடு, மாடுகள் மேய வேண்டும். நீரின்றி அமையாது உலகெனில் ஆடு, மாடு இன்றி அமையாது காடு.” என்று தெரிவித்தார்.

# எமது அரசியல் கூட்டணி தொடர்பில் கருத்துகளை தவிர்த்துக்கொள்ளுங்கள்

## கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுக்கு ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள்



அரசியல் கூட்டணி குறித்த கருத்துகளை தவிர்க்குமாறு கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாக அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்ட மாபெரும் மக்கள் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு தொடர் தோல்விகளை சந்தித்து மக்களின் நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது.

எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டிக்காக்கப்பட்ட மாபெரும் மக்கள் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை துரோகக் கூட்டத்திடமிருந்து மீட்டெடுப்பதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவை ஏற்படுத்தி நாம் போராடி வருகிறோம்.

இதில் நீதிமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் நமக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை நாம் எதிர் கொள்ளும் வகையில், எம்.ஜி.ஆரால் நிகழ்த்தப்பட்ட சாதனைகளையும், ஜெயலலிதாவால் நிகழ்த்தப்பட்ட சாதனைகளையும் பட்டிதொட்டி எங்கும் எடுத்துச் செல்லவும், தி.மு.க. ஆட்சியில் தற்போது மக்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் மற்றும் தமிழ்நாட்டிற்கு எதிரான மத்திய அரசின் செயல்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்லவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அழிவுப் பாதையில் அழைத்துச் செல்லப்படுவதை மக்களுக்கு எடுத்துக் காட்டவும் பொதுக் கூட்டங்களை கழக நிர்வாகிகள் ஆங்காங்கே நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் செய்தித் தொடர்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூட்டணி குறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க வேண்டாம் என்று அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறேன். இதனை மீறிச் செயல்படுபவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டணி குறித்த முடிவு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டவர்களின் கருத்தினைக் கேட்டு, கள நிலவரத்தை ஆராய்ந்து, அதற்கேற்ப தக்க நேரத்தில் உரிய முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# சன நெரிசலில் சிக்குண்டு 48 பலஸ்தீனியர்கள் பலி




காசா உதவி மையத்தில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு 48 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

காசாவில், இஸ்ரேல் படையினர் நடத்திவரும் தாக்குதல்களில் சுமார் 60,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், காசா உதவி மையங்களில், நிவாரண பொருள்களுக்காகக் காத்திருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இஸ்ரேலின் இராணுவம், மக்களின் பசி மற்றும் பட்டினியை ஆயுதமாகப் பயன்படுத்துவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இந்தநிலையில், காசாவின் ஜிகிம் கிராசிங்கில் உள்ள உதவி மையத்தில் ஏற்பட்ட, சன நெரிசலில் சிக்குண்டு 48 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில், 89 சிறுவர்களும், 65 வயதானவர்களும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் உயிரிழந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




# ரஷ்யாவில் மீண்டுமொரு சக்திவாய்ந்த நில அதிர்வு

## ஆழிப்பேரலை எச்சரிக்கை

ரஷ்யாவில் சில நாட்கள் இடைவெளியில் அங்கு மீண்டும் ஒரு சக்திவாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் குரில் தீவுகளில் சுமார் 6.8 மெக்னிடியூட் அளவில் வலிமையான நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருப்பினும், பின்பு இந்த நில அதிர்வு 7 மெக்னிடியூட் அளவிலிருந்ததாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த வலிமையான நில அதிர்வைத் தொடர்ந்து அங்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வால் உயிர்ச்சேதம் அல்லது பொருள் சேதம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இருப்பினும், கம்சட்காவின் பலகடலோரப் பகுதிகளுக்கு ஆழிப்பேரலை அலைகள் வரக்கூடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

மேலும், கம்சட்காவின் அருகே உள்ள அதிக ஆபத்துள்ள கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக, வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 600 ஆண்டுகளுக்குப் பின் வெடித்தது ரஷ்ய எரிமலை

ரஷ்ய கம்சற்கா எரிமலையில் 600 ஆண்டுகளுக்குப் பின்னர் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிமலை வெடிப்பு, கடந்த வாரம் மத்திய கிழக்கில் ஏற்பட்ட நில அதிர்வுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை சரித்திர பூர்வமாக ஏற்றுக்கொள்ளலாம் என ரஷ்ய எரிமலை வெடிப்பு மீட்புக் குழுவின் தலைவர் ஓல்கா கிரினா உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை ஏற்பட்ட நில அதிர்விற்கும் ரஷ்ய எரிமலை வெடிப்பிற்கும் தொடர்பு இருக்கலாம் என ஏனைய நாடுகளின் விஞ்ஞானிகளும் குறிப்பிட்டுள்ளனர்.









# கல்முனை விவகாரம் குறித்து சனிக்கிழமையன்று முஸ்லிம் எம்.பிக்களுடன் விசேட கலந்துரையாடல்

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனையின் சமகால விவகாரங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் முக்கிய கலந்துரையாடல் கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் சிவில் நிறுவனங்களுக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒலுவில் கிறீன் வில்லாவில் இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடலில் திகாமடுல்லயைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸான் காரியப்பர், எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாஸீத் மற்றும் எம்.ஏ.தாஹிர் ஆகியோர் கட்சி பேதங்களுக்கப்பால் கலந்து கொண்டு கல்முனை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுவதை உறுதி செய்தனர்.

இக்கலந்துரையாடலில் கல்முனையிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், ஜம்இய்யதுல் உலமா சபையினர், வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சமகால பிரச்சினைகள் குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

தேசிய மட்டத்தில் சமூகப்பிரச்சினைகள் நாடளுமன்றத்துக்கு கொண்டு செல்லப்படவும் கல்முனை பிராந்தியத்தின் இருப்பு மற்றும் எதிர்கால நலன் குறித்த பரிசீலனைகள் முன் கொண்டு செல்வதற்கும் ஏதுவான ஆரோக்கியமான முயற்சியாக இக்கலந்துரையாடலில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆதம்பாவா எம்.பி. இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவில்லை.


















# 35 ஆவது தேசிய ஷுஹதாக்களின் தினம் நேற்று காத்தான்குடியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(பாறுக் ஷிஹான்)

காத்தான்குடியில் இரு பள்ளிவாசல்களில் 1990 ஆகஸ்ட் மாதம் 03 திகதி இரவு நேர தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்கள் முஸ்லிம்கள் கண்மண் தெரியாமல் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான தேசிய ஹுதாக்கள் தினம் நேற்று 35 வருடமாக அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலை புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று குற்றம் சுமத்தப்படுவது தெரிந்ததே.

இச்சம்பவத்தை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு வருடமும் தேசிய ஹுதாக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. நேற்று ஞாயிற்றுக் கிழமை 35 ஆவது தேசிய ஹுதாக்கள் தின நிகழ்வுகள் ஹுஸைனியா மஸ்ஜித் மற்றும் மீரா ஜும் ஆ மஸ்ஜித் ஆகிய இரு பள்ளிவாசல்களில் இடம்பெற்றன.

இதனயொட்டி கத்தமுல் குர் ஆன் ஓதப்பட்டதுடன் து ஆ பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், பிரதித் தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கள், பிரமுகர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊர் முக்கியஸ்தர்கள், ஹுதாக்களின் குடும்பத்தினர் என அதிகமானோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து காத்தான்குடி பள்ளிவாச்ல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை காத்தான்குடி கிளை, வர்த்தக சங்கம், தேசிய ஹுதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம் மற்றும் இரு பள்ளிவாசல்களின் நிர்வாகம் ஆகியன இணைந்து பிரகடனமொன்றை வெளியிட்டனர்.

அப்பிரகடனத்தில் 1985ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு வரையான யுத்த காலப் பகுதியில் இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் காணி இழப்புகள் தொடர்பில் ஒரு நீதியானதும் நியாயமானதும் சுதந்திரமானதுமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து காத்தான்குடி பிரதேச செயலாளரிடம் மக்ஜர் கையளிக்கப்பட்டதுடன் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு துக்க தினமாக நேற்றைய நாள்அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# ஹெரோயின் போதைப்பொருளுடன் கணவனும் மனைவியும் யாழில் கைது



யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கணவன் – மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம், தம்பதியினரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை அவர்களின் உடமையில் இருந்து 90 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தம்பதியினரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்




# குப்பிளான் மகோற்சவ கால தெய்வீக உரையில் இன்று



குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ பெருந்திருவிழாவில் இன்று 04 ஆம் திகதி திங்கட் கிழமை பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் "தேடிவந்த கயிலை" என்னும் விடயப்பொருளில் சொற் பொழிவாற்றவுள்ளார்.








# வடக்கில் கல்விதுறை பின்னடைவுக்கு நிர்வாகப் பிரச்சினைதான் காரணமாம்!

## பிரதமரும் கல்வியமைச்சருமான ஹரிணி வவுனியாவில் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

வட மாகாணத்தில் கல்வி நிலைமை பின்தங்கியுள்ளமைக்கு நிர்வாகப் பிரச்சினையே காரணமாக இருப்பதாக தெரிவித்த பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய விரைவில் தாம் கல்வி நிர்வாக அதிகாரிகளை அழைத்துக் கலந்துரையாடித் தீர்வினைக் காண இருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட கல்வி நிலைமை மற்றும் கல்வி மறு சீரமைப்பு தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட கல்விசார் திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

ஆசிரியர்கள், அதிபர்கள் பற்றாக்குறை, அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், அதிபர் தொழிற்சங்கங்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் மற்றும் பாடசாலை மட்டங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிபர்கள், ஆசிரியர்கள் சிலரும் கருத்துக்களை தெரிவித்து இருந்தனர்.

இக்கருத்துக்களை செவிமடுத்த பிரதமர் கருத்து தெரிவித்த போது –

ஆசிரியர் நியமனங்கள் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்பட முடியாமல் இருப்பதற்கு அபிவிருத்தி உத்தியோதர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அவ் வழக்கு விசாரணையில் இருப்பதே காரணம். விரைவில் இதற்கான தீர்ப்பு கிடைக்கும் என நம்புகின்றேன். அதன் பின்னர் ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளோம்.

கல்வி மாணவர்களுக்கானது. அதனை நாம் சரியாக வழங்க வேண்டும். ஐம்பது மாணவர்களுக்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக கவனம் செலுத்தப்படும். வட மாகாணத்தில் கல்வி நிலைமை பின்தங்கியுள்ளமைக்கு நிர்வாகப் பிரச்சினையே காரணம். விரைவில் கல்வி நிர்வாக அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடிதற்குத்தீர்வைக்காணஇருக்கின்றேன். – எனத் தெரிவித்தார்.














# வவுனியா பல்கலையில் நூலகத்தை திறந்து வைத்தார் பிரதமர் ஹரிணி

(கி.வசந்தன்)

வவுனியா பல்கலைகழகத்தில் புதிய நூலகம் ஒன்றை பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

வடக்கிற்கு விஜயம் செய்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா பல்கலைகழகத்தின் புதிய நூலகக் கட்டடத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்தார்.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் மாணவர்களுடன் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் –

பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடவோ, அல்லது அரசியலில் ஈடுபடுவதற்கோ எந்த தடையும் இல்லை. இருப்பினும், வன்முறை அல்லது நாசவேலைகளை மேற்கொள்வதை பொறுத்துக்கொள்ள முடியாது. அத்துடன் பல்கலைக்கழகங்களை வெறும் பட்டம் வழங்கும் அமைப்புகளாக அல்லாமல், ஆராய்ச்சி சார்ந்த நிறுவனங்களாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம். – எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் மற்றும் துணைவேந்தர் அ.அற்புதராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.









# லக்சபான நீர் மின் நிலையப் பகுதியில் நீர் அணையின் வான் கதவுகள் திறப்பு

(மஸ்கெலியா நிருபர்)

நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து கன மழை பெய்தது வருவதால் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களிலும் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

குறிப்பாக லக்சபான நீர் மின் நிலைய பகுதியில் உள்ள நீர் அணையில் இருந்து தற்போது வான் கதவு ஒன்று மூன்று அங்குலம் திறந்து விடபட்டு உள்ளது என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து அதிக மழை பெய்யும் பட்சத்தில் ஏனைய வான் கதவுகள் திறந்து விட வாய்ப்பு உள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# மஸ்கெலியாவில் தொடர்ந்தும் பலத்த மழை கவரவலை சந்திப் பகுதியில் பெருவெள்ளம்







(மஸ்கெலியா விசேட நிருபர்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் கனத்த மழை பெய்தது வருகிறது.

இதன் காரணமாக சாமிமலை கவரவலை சந்தி பகுதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு வாகன போக்குவரத்து தடைப்பட்டது.

மேலும் கவரவலை பிரதேச்த்தில் உள்ள பல இல்லங்களில் வெள்ள நீர் புகுந்தது உள்ளது. இதன் காரணமாக அப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி அம் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -04.08.2025




இன்று உங்கள் மனதில் ஏற்படும் பதற்றத்தையும் பாதுகாப்பின்மை உணர்வையும் கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை எண்ணங்களை வளர்க்காதீர்கள். இன்று சாதகமான நாளாக இருக்கும். நம்மால் சாதிக்க முடியும் என்று எண்ணுங்கள்.

உங்கள் பணிகளை ஆற்ற முடியும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும். இந்த உணர்வின் மூலம் தடைகளை தாண்டி செயல்படுவீர்கள்.

உங்கள் துணையை இன்று சமாதானப்படுத்துவதைக் கடினமாக உணர்வீர்கள். தேவையற்ற விஷயங்களை பேசுவதை தவிருங்கள்.

இன்று பணவரவுக்கான சாத்தியம் இல்லை. அதிக செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது ஏற்றதல்ல.

இன்று பணியில் சில தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

எளிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது இன்றைய நாளின் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. இன்று அதிக செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.




இன்று மகிழ்வுடன் இருப்பீர்கள். மனதில் தெளிவு இருக்கும். உங்கள் திறமைகளை அறிந்து அதனை சிறந்த தகவல் பரிமாற்ற முறையில் வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் மேலதிகாரியிடமிருந்து உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள். பணியில் உங்கள் தனித்தன்மையைக் காட்டுவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நேரத்தை கழிப்பீர்கள். உங்கள் துணையை நண்பர்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்கள். அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் அதிகப் பணம் காணப்படும். அதனை சிறப்பான முறையில் சேமிப்பீர்கள்.

இன்று முழு ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தேக ஆரோக்கியமும் ஆற்றலும் சிறந்து காணப்படும்.




இன்றைய நாளை ஆன்மீக ஈடுபாட்டிற்கு பயன்படுத்துங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஒன்றே திருப்தி காண சிறந்த வழி ஆகும்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அதிக பணிகளை எதிர்கொள்ள நேரும். இதனால் பதற்றம் சிறிது அதிகரிக்கும்.

உங்கள் துணையுடனான அனுகுமுறையில் சிறிய விஷயங்களையும் தீவிரமாக பார்ப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பிரச்சினை நிறைந்திருக்கும். அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். தேவையற்ற பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நெருங்கிய நண்பர்களின் ஆலோசனை பெறுதல் நல்லது. இதன் மூலம் நட்பின் சிறப்பையும் நீங்கள் உணர முடியும்.

இன்று பதற்றம் காணப்படும். நல்ல பலனைப் பெற இன்று திறமையாக திட்டமிட வேண்டும்.

மனதில் காணப்படும் மகிழ்ச்சியின்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உற்சாகத்தை வெளிப்படுத்த முயலுங்கள்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும். இது கவலையை ஏற்படுத்தும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி மற்றும் முதுகு வலி காணப்படும். ஆரோக்கியமாக இருக்க அமைதியுடன் இருக்க வேண்டும்.




இன்று காணப்படும் கடினமான சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப்படியான பணிச்சுமை காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை இழக்க நேரலாம். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

உங்கள் தேவைகேற்ப பணம் கிடைக்க இயலாது. மருத்துவ செலவுகள் காணப்படும் இது தவிர்க்க இயலாதது.

அதிக சிந்தனை தலைவலியை ஏற்படுத்தும். எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருப்பது நல்லது.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் ஆர்வங்களை மேம்படுத்தும் பல வாய்ப்புகள் கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம்.

பணியிடத்தில் வெற்றி காண்பீர்கள். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக இன்று உங்களுக்கு அதிக பண வரவு கிடைக்கும்.

இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வளர்ச்சி காண்பீர்கள். கடினமான செயல்கள் கூட இன்று எளிதாகச் செய்வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று அர்ப்பணிப்புடன் பணி செய்வீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக பணிகளை திறமையாக செய்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் சம நிலையோடு இருப்பீர்கள். உங்களின் இந்த மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இந்த அணுகுமுறை உறவில் நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும்.

பிதுரார்ஜித சொத்து அல்லது கடன் மூலம் பண வரவு ஏற்படும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த இந்த நாளைப் பயன்படுத்தலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நம்பிக்கை உணர்வை வளர்த்துக் கொள்வீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் -04.08.2025




ஆன்மீக விழிப்புணர்வு இன்று உங்களுக்கு ஆறுதலையும் வளர்ச்சியையும் தரும். இன்றைய நாளை மகிழ்ச்சியாக நீங்கள் வழி தேடுவீர்கள். விரைவான முடிவுகளால் முன்னேற்றம் கிடைக்காது என்பதால் அதனைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் அன்றாட பணிகளை கையாளும் போது கவனம் தேவை. பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையிடம் மனம் திறந்து உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்க நேரும்.

கால்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பது அவசியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்களுக்கான பணிகள் கடினமாக இருந்தாலும் அதனை எளிதாக முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த நேர்மறை அணுகுமுறை காரணமாக நீங்கள் பிறருக்கு எடுத்துக்காட்டாய் இருப்பீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக உங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் பணம் கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்களிடம் காணப்படும் நேர்மறை போக்கு உங்களை சிறந்த ஆரோக்கியத்தில் வைத்திருக்கும்.




இன்று ஆன்மீக விழா மற்றும் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டு திருப்தியடைவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவீர்கள். அது உங்களுக்கு ஆறுதல் தரும்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் சூழ்நிலையை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். பணிகளை அதன்படி திட்டமிட வேண்டும்.

மன அழுத்தம் மற்றும் விரக்தியை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனைத் தவிர்த்தல் நல்லது.

இன்று பண நஷ்டத்திற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டியது அவசியம்.

முதுகு வலி மற்றும் தலை வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. ஓய்வெடுப்பது அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது




இன்றைய நாள் இனிமையான நாளாக இருக்கும். இசை மற்றும் மந்திரங்கள் ஜபிப்பது மனதுக்கு ஆறுதல் மற்றும் அமைதி அளிக்கும். அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடச் சூழல் சுமுகமாகவும் திருப்தியாகவும் இருக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். கணிசமான வங்கியிருப்பை பராமரிப்பீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். தேக ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள்.

# அகில இலங்கை இந்து மாமன்றத்தில் நீத்தார் நினைவைப் போற்றும் நிகழ்வு













அகில இலங்கை இந்து மாமன்றத்தைத் தலைமை தாங்கி வழி நடத்தியவர்கள், வாரி வழங்கியவர்கள், முக்கிய பதவிகளிலிருந்து வழி காட்டியவர்கள் மற்றும் பொறுப்புக்களை ஏற்றுச் சேவையாற்றிய முகாமைப் பேரவை அங்கத்தினர்களின் நினைவாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை "நீத்தார் நினைவு" நிகழ்வு தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைவர் அகல் விளக்கு ஏற்றுகின்றமையையும், சக்தி இல்ல மாணவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்துகின்றமையையும், நீத்தார் நினைவு உரையாற்றிய விரிவுரைஞர் சிவகுருநாதன் கேசவனை பொருளாளர் ச.க. குசலகுமார், உப தலைவர் சி. தனபாலா ஆகியோர் கௌரவிக்கின்றமையையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்